SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# AA1 பரீட்சை - ஜனவரி 2020

**(January 2020 Examination - AA1 Level)**

**பரிந்துரைக்கப்பட்ட விடைகள்**

பாட இலக்கம் **: AA13**

# வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல் (EBA)


இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாஹிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்
கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

## AA1 பரீட்சை – ஜனவரி 2020
## (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்
## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

### வினா 1ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

| வினா இலக்கம் | விடைகள் |
|---|---|
| 1.1 | 4 |
| 1.2 | 2 |
| 1.3 | 2 |
| 1.4 | 4 |
| 1.5 | 4 |
| 1.6 | 4 |
| 1.7 | 3 |
| 1.8 | 2 |
| 1.9 | 2 |
| 1.10 | 1 |
| 1.11 | தவறு |
| 1.12 | சரியானது |
| 1.13 | சரியானது |
| 1.14 | சரியானது |
| 1.15 | சரியானது |
| 1.16 | குறைவடைதல |
| 1.17 | ஒடுங்கிய |
| 1.18 | நீண்ட கால ஓட்டத்தில் |
| 1.19 | சராசரி கிரயம் |
| 1.20 | மூலதன திரட்டு |

**(ஒவ்வொன்றிற்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)**

**பிரிவு *A* இன் நிறைவு**

**பகுதி - B**

**நான்கு வினாக்களுக்கும் விடையளிக்க.**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

## வினா 2ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 01 வணிக பொருளியலுக்கான அறிமுகம்**

(a) (i) அருமை

வரையறையற்ற விருப்பங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட வளங்கள் இடையே காணப்படும் பற்றாக்குறை அருமை ஆகும் சமூகத்தின் வரையறையற்ற விருப்பங்களை பூர்த்தி செய்வதற்காக வரையறுக்கப்பட்ட வளங்கள் போதுமானதாக காணப்படாமை அருமை எனப்படும்.

**(02 புள்ளிகள்)**

(ii) தெரிவு

பொருளாதார வளங்கள் வரையறைக்குட்பட்டவை ஆகையால் மக்களுக்கு அவர்களது விருப்பத்தின் பேரில் பொருட்கள் சேவைகளை தெரிவு செய்ய முடியாது. ஆகையால் அவர்களுக்கு கட்டாயமாக இருக்கும் இருப்பின் அடிபடையில் தெரிவினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ் நிலையில் விருப்பமானது இழக்கப்படுகின்றது.

அமையச்செலவானது மெய்பெறுமதியுடைய இழக்கப்படுகின்ற மாற்றுத்தெரிவாகும். ஒரு சமூகம் கட்டாயமாக மாற்று தெரிவினை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலை ஏற்படும் போது அங்கு அமையச்செலவு உருவாக்கமடைகின்றது.

**(03 புள்ளிகள்)**

(b)
1. அரசாங்கமே சமவுடமை பொருளாதாரத்தினை கொண்டு நாடாத்துகின்றது தனியார் துறையின் எந்த ஒரு தலையீடுகளும் அற்றது.
2. பொருளாதார செயற்பாடுகள் மத்திய திட்டமிடல் குழுவினால் (Central Planning Committee -CPC) கையாளப்படுகின்றது.
3. இங்கு மத்திய திட்டமிடல் சபை பொருளாதார நடவடிக்கைகளை கையாள்கின்றமையால், இங்கு கடுமையான விதிகளும் கட்டுப்பாடுகளும் காணப்படுகின்றன. ஆகையால் இதனை ஒரு முக மையப்பட்ட ஆட்சியாளர் (Bureaucrats) அல்லது அதிகாரவர்க்கம் என அழைக்கப்படுகின்றது.
4. இங்கு நுகர்வோரக்கு இறையாண்மையானது காணப்படாது. அதனடிப்படையில் நுகர்வோரின் விருப்பத்திற்கேற்ப அனைத்து பொருட்களையும் கொள்வனவு செய்ய முடியாது.
5. இங்கு மத்திய திட்டமிடல் சபை வருமானத்தினை சமபங்கீடாக பங்கீடு செய்வதால் சமூகத்தில் உள்ள மக்களிடையே ஏற்றத்தாழ்வு ஏற்படாது
6. பெரும்பாலாக CPC சமூகத்தின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுக்கின்றது.
7. இது சுற்றுச்சூழலினை பாதுகாப்பாக பேணுவதை உறுதிசெய்கின்றது.
8. பினவரும் நோக்கங்களுக்காக நிதியினை சேகரிப்பதற்கு CPC சாதாரண இலாபத்தினை ஈட்ட எண்ணுகின்றது.
   - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவீனங்கள்
   - தேசிய பாதுகாப்பு செலவீனங்கள்
   - கல்வி செலவீனங்கள்
   - சுகாதார செலவீனங்கள்

9. இங்கு போட்டிச் சந்தைகள் இல்லை
10. இங்கு விலை இயக்கமுறை இல்லை.
11. இங்கு இலாபம் நோக்கம் இல்லை.

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 02 புள்ளிகள்)**

## வினா 3ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 02 நுகர்வோர் நடத்தையும் சந்தையும்**

(a) (i)

| | | |
|---|---|---|
| Qd | = | 1500 - 6p |
| Qs | = | -100 + 2p |
| | | |
| Qd | = | Qs சமநிலையில் |
| 1500 - 6p | = | -100 + 2p |
| 1600 | = | 8p |
| 1600/8 | = | p |
| **200** | **=** | **P** |

**பண்டத்தின் சமநிலை விலை = ரூபா. 200/-**

P = 200 யினை சமநிலை சமன்பாட்டில் பிரதீயீடு செய்தல் (Qd)

| | | |
|---|---|---|
| Qd | = | 1500 - 6p |
| Qd | = | 1500 - (6 x 200) |
| Qd | = | 1500 - 1200 |
| **Qd** | **=** | **300** |

**பண்டத்தின் சமநிலை கணியம் = 300 அலகுகள்**

**(03 புள்ளிகள்)**

(ii) நகர்வோரின் வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பு மாற்றம்.


நகர்வோனின் வருமானத்தில் அதிகரிப்பு ஏற்படும் போது சந்தையின் கேள்வியும் அதிகரிக்கும் இதனால் நுகர்வோனின் கொள்வனவிற்கான வருமான பங்கீடு மாறும், இதனால் வருமானத்தில் கொள்வனவு செய்யப்படும் எண்ணிக்கை மாற்றமடையும். அதன் அடிப்படையில் நுகர்வோரின் கொள்வனவு சக்தி அதிகரிக்கும்.

இதனால் கேள்வி வளையி வலது பக்கம் நோக்கி நகரும் மற்றும் கேள்வி மிகை நிலை ஏற்படும்.

இதன் தொடர்விளைவாக சமநிலை விலை மற்றும் தொகை அதிகரிக்கும்.

**(02 புள்ளிகள்)**

(b)




இலாபம் அதிகரிக்கும் போது எல்லை வருமானம் எல்லை செலவீனத்துக்கு சமனாக காணப்படும். இந்நிலையில் பண்டத்தின் விற்பனை விலையானது அப்பண்டத்தின் சராசரி விலையினை விட அதிகமாகக் காணப்படும்.

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 02 புள்ளிகள்)**

## வினா 4ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 04 ஒரு சந்தைமுறையில் அரசாங்கம் வகிக்கும் பங்கு**


(a) **உச்ச விலை / உயர்ந்த பட்ச கட்டுப்பாட்டு விலை**

சந்தை விலைப்பொறிமுறையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட சமநிலை நுகர்வோருக்குப் பாதகமானது என எண்ணும் போது நுகர்வோரின் நலன் பேணும் நோக்குடன் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படும் சமநிலை விலையை விட குறைந்த விலை உச்ச விலை ஆகும்.

எந்த ஒரு விலையும் உச்ச விலையை விட உயர்வாக இருந்தால் அது சட்டவிரோதமானது மற்றும் இதனை கருப்பு சந்தை விலை என அழைக்கப்படும்.

உச்சபட்ச விலை கொள்கையின் முக்கிய பொருளாதார விளைவாக கேள்வி மிகை அல்லது பற்றாக்குறையினை சந்தையில் உருவாக்கும் மற்றும் இப்பற்றாக்குறை நிலைமை சந்தையில் பாதகமான விளைவினை ஏற்படுத்தும்

உச்ச விலை கொள்கையை பின்வருமாறு விபரிக்கலாம்




**ஆகக்குறைந்த விலைக்கட்டுப்பாடு / இழிவு விலை / விலை கீழ் எல்லை**

சந்தையில் உற்பத்தியாளருக்கு உயர் விலையொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக சமநிலைவிலைக்கு மேலான விலையொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காக சமநிலைவிலைக்கு மேலான விலையொன்றை நிர்ணயித்தல் ஆகக்குறைந்த விலைக்கட்டுப்பாடு இழிவு விலை எனப்படும். மற்றும் உற்பத்தியாளர் தங்களது பண்டத்தினை இவ் இழிவு விலைக்கு கூடவோ அல்லது குறைவாகவோ விற்க முடியும். இது சட்டர்வமான விலையாக கருதபடுகின்றது.

சந்தையில் நிர்ணயிக்யப்படும் சமநிலை விலையானது உற்பத்தியாளனுக்கு பாதகமானது என அரசாங்கம் எண்ணும் போது இழிவு விலையானது நிர்ணயிக்கப்படுகின்றது. இது சமநிலை விலையை விட அதிகமாக காணப்படும்.

இழிவு விலை கொள்கையின் முக்கிய பொருளாதார விளைவாக மிகை நிரம்பலை சந்தையில் உருவாக்கும் மற்றும் இவ் மிகை நிரம்பலை நீக்குவதற்கு படிமுறைகள் எடுக்காவிடின் உற்பத்தியாளனுக்கு இந்நிலைமை சந்தையில் பாதகமான விளைவினை ஏற்படுத்தும் வகையில் மிகவும் குறைந்த மட்டத்துக்கு சந்தை விலை குறைவதற்கு சாத்தியம் உண்டு.

இழிவு விலை கொள்கையை பின்வருமாறு விபரிக்கலாம்




(b) அரசாங்க பாதீட்டில் பாதீட்டு பற்றாக்குறை கொண்டிப்பதால் ஏற்படும் தாக்கங்கள்

1. பற்றாக்குறைக்கு நிதியிடல்

பற்றாக்குறையான பாதீடு நிதியிடப்படவேண்டியுள்ளதுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு புதிய அரச படுகடனை வழங்குவது மூலம் இதனை செய்ய முடியும் இப் பாதீட்டு பற்றாக்குறை ஒரு மட்டத்திற்கு உயர்வதால் நீண்டகாலத்தில் அரசாங்க படுகடன்களைக் கொள்வனவு செய்பவர்களைக் கவர்வதற்கு உயர்ந்த வட்டி வீதங்களை வழங்க முன்வரும் மற்றும் இவ் உயர் படுகடன்கள் எதிர்காலத்தில் வரிகள் உயர்வதற்கும் வழிவகுக்கும்.

2. அரச படுகடன்கள் தொடர்ச்சியாக அதிகரித்தல்

நீண்டகாலத்தில் அரச படுகடன்கள் திரண்ட பொதுபடுகடனாக மாறுகின்றது. இதனால் அரசாங்கம் படுகடன் வட்டியாக பெரும் தொகையை அரசாங்க பிணைகள் மற்றும் அரசாங்க முறிகள் வைத்திருப்பவர்களுக்கு செலவு செய்ய வேண்டியுள்ளது. இவ் சந்தர்பத்தில் அமையச்செலவு உருவாகின்றது அதாவது வட்டிகொடுப்பனவுக்காக செலவு செய்வதினை ஆக்கர்வமான வழிகளில் பயன்படுத்தப்படலாம் என்பதாகும் உதாரணமாக சுகாதார சேவைகளுக்கு செலவு செய்வதை அதிகரிப்பதாகும். இது அரசாங்க கடன்களை வைத்திருப்பவர்களுக்கு வரிகளைச் செலுத்தும்

மக்கள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து வருமான மாற்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவடன் பொருளாதாரத்தில் வருமானத்தையும் மீள்பகிர்வு செய்ய காரணமாகின்றது.

3. வீணாகும் பொது செலவுகள்

அநேக பொருளியல் நிபுணர்கள் அரசாங்க உயர்மட்ட செலவுகள் செய்வது பற்றி இணக்கம் தெரிவிப்பதில்லை. அரச துறையினால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எடுக்குமென உயர்வான பங்கு பொருளாதாரத்தில் தனியார் துறையின் வளர்ச்சியின் மேல் எதிர்மறையான விளைவு உள்ளதென அவர்கள் நம்புகின்றனர். பொதுத்துறையில் விரயம் அதிகமென உயர் செலவின் நன்மைகளை நம்புவதுடன் மேலும் தனியார் துறையினரால் பயன்படுத்தப்படும் போது பணம் சிறப்பாக பயன்படுத்தப்படும்.

4. அரசாங்கம் நலன்புரி சேவைகளுக்கு செலவிடும் செலவுகளை குறைத்தல்

அரசு நலன்புரி சேவைகளுக்கு செலவிடும் செவீனங்களை குறைத்துக்கொண்டு நாட்டின் வரி வருமானத்தினை பெருக்கி கொள்வதற்கு வழிவகை செய்தல்.

5. பொருளாதார வளர்ச்சி குறைவடைதல்

தொடர்ச்சியான பொருளாதார பாதீடு படிப்படியான பொருளாதார வளர்ச்சி குறைவடைகின்றதுக்கு வழிவகுக்கும்

6. பணவீக்க அதிகரிப்பு

வெளிநாட்டு நாணயத்தின் மதிப்பு குறைவடைவதால் பொருட்கள் மற்றும் சேவைகள் விலைகள் அதிகரிக்கின்றன இதனால் இது பணவீக்கத்துக்கு வழிவகுக்கின்றது.

7. அமெரிக்க டொலர்க்கு எதிராக உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி தேய்வடைதல்.

அரசாங்கம் படுகடன்களை அடைப்பதற்கு வெளிநாட்டு ஓதுக்கங்களை மேற்கொள்ள வேண்டும். ஆனால் அமெரிக்க டொலர்க்கு எதிராக உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி தேய்வடைதல் வெளிநாட்டு ஓதுக்கங்கள் வீழ்ச்சியடைகின்றமை.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 5ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

| **அத்தியாயம் 05 பணமும் விலை மட்டமும்** |
|---|

(a) (i) **பணத்தின் தொழிற்பாடுகள்**

**பணத்தின் முக்கிய நான்கு தொழிற்பாடுகள்**

**பரிமாற்று ஊடகம்**

கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்தும் முகமாக பயன்படும் பரிமாற்றூடகமாக இருப்பது பணத்தின் முக்கிய தொழிற்பாடாகும். இங்கு பணம் இல்லாவிடின் எல்லா வியாபார நடவடிக்கைகளும் பண்டமாற்று முறையினுடாகவே செயற்படவேண்டியிருந்திருக்கும். பண்டமாற்று முறை தேவையின்றி பொருட்கள் சேவைகளை பரிமாற்றிக்கொள்ள பணம் பொருளாதார முகவர்களுக்கு உறுதுணை புரிகின்றது.

**பெறுமான திரட்டாகத் தொழிற்படுதல்**

ஏதிர்கால நோக்கம் கருதி மக்கள் தனது செல்வத்தினை - கொள்வனவு சக்தியினை பணவடிவில் திரட்டி வைத்திருப்பதினை பணத்தின் பெறுமானத்திரட்டு என்ற தொழிற்பாடு குறிக்கும். பணத்தின் வடிவில் செல்வத்தினை திரட்டி வைத்திருக்கும் போது அதனை

எந்த ஒரு சொத்தின் வடிவமாற்றம் செய்ய முடியும் ஆனால் பொது விலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லுகையில் பணவீக்க உருவாகும். இக் காலங்களில் பணம் பெறுமானத்திரட்டாக தொழிற்படுவது குறையும். மாறாக பொது விலைமட்டமானது உறுதியாக இருக்கும் காலங்களில் பணம் சிறந்த பெறுமானத்திரட்டு கருவியாக செயற்படும். பணம் பெறுமானத்திரட்டாகத் தொழிற்படுவதற்கு பணத்தின் புர்ண திரவதன்மையே காரணமாகும்.

**பிற்போடப்பட்ட கொடுப்பனவு கருவியாக செயற்படல்**

காலங்கடந்த கொடுப்பனவுகளை மிகவும் வினைதிறனுடன் மேற்கொள்வதற்கு பணம் பயன்படுதலை இது குறிக்கும். கடன்களினதும் எதிர்கால ஒப்பந்தங்களினதும் மீள்கொடுப்பனவுகள் போன்ற கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கான ஒரு ஊடகமாக பணம் பயன்படுதலை இவ் தொழிற்பாடு குறிக்கும். அதாவது இன்று பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்து எதிர்காலத்தில் இலகு தவணையில் செலுத்துதலை குறிக்கும்.

உதாரணம் : வீட்டுக்கடன் அல்லது வாகனம் தவணை முறையில் கொள்வனவு என்பன.

**கணக்கீட்டு அலகு**

பொருட்கள் சேவைகளின் பரிமாற்றப் பெறுமதியினை அளவிடுவதற்கு பணம் என்ற பொது அலகு பயன்படுதலை பணத்தின் கணக்கீட்டு அலகு என்பதாகும். பணம் ஒரு பொதுவான கணக்கீட்டு அலகு என்ற வகையில் வேவ்வேறான பொருட்கள் சேவைகளின் விலையை ரூபாய்களிலும் சதங்களில் ஒப்பிடக்கூடியதாக இருப்பதுடன் பொருட்களுக்கும் சேவைகளுக்குமான ஏற்படுகின்ற குறைவான விலைகளின் ஊக்குவிப்புக்கு நுகர்வோர்கள் பிரதிச்செயலாற்றுவதால் சார்புவிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் கேள்வியல் நகர்வுகளை ஏற்படுத்தும்.

**(03 புள்ளிகள்)**

(ii) பொதுவிலைமட்டத்திற்கும் பணத்தின் பெறுமதிக்கும் இடையேயிருக்கும் தொடர்பானது பொருட்களினதும் சேவைகளினதும் விலைகள் அதிகரிக்கும் போது பணத்தின் பெறுமதி குறைவடைகின்றது. விலைமட்டத்திற்கும் பணத்தின் உள்ளக கொள்வனவுச் சக்திக்கும் நேர்மாற்றுத் தொடர்புண்டு. பணத்தின் பெறுமதி எடுத்துரைப்பது குறிப்பிட்ட பண பெறுமதியால் கொள்வனவு செய்யக்கூடிய அலகுகளின் எண்ணிக்கையாகும். விலைமட்டம் எடுத்துரைப்பது பொருளாதாரத்திலுள்ள பொருட்கள் சேவைகளின் விலைகள் உயரும் போது பணத்தின் கொள்வனவு சக்தி பெறுமதி குறைகின்றது.

**(03 புள்ளிகள்)**

| **அத்தியாயம் 08 சர்வதேச வியாபாரம்.** |
|---|

(b) (i) **பாதுகாப்புவாதம்**

உள்நாட்டுச்சந்தையினுள் வெளிநாட்டு பண்டங்கள் சுதந்திரமாக உட்பிரவேசிப்பதை தடை செய்யும் எந்த வகையான செயற்பாடும் பாதுகாப்புவாதம் என அழைக்கப்படும். இங்கு வெளிநாட்டு உற்பத்தியிலிருந்து உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் நோக்குடன் இறக்குமதிகளுக்கு இறக்குமதிதீர்வை அறவிடப்படுகின்றது.

**(02 புள்ளிகள்)**

(ii) **பாதுகாப்புவாதத்தின் அனுகூலங்கள்**

1. வெளிநாட்டு உற்பத்தியிலிருந்து உள்நாட்டு உற்பத்தியாளர்களை காப்பாற்றுதல்
2. உள்நாட்டில் தன்னிறைவை ஏற்படுத்துதல்
3. வேலைவாய்ப்பை அதிகரித்தல்
4. குவித்தலை தடைசெய்தல்
5. உள்நாட்டு வளப்பயன்பாட்டை அதிகரித்து பொருளாதார வளர்ச்சியை அதிகரித்தல்
6. பாதகமான சென்மதிநிலுவை பிரச்சனையை சீர் செய்தல்
7. அரசவருவாய் மூலாதாரம்
8. பாதகமான இறக்குமதிகளை தடைசெய்தல்

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

SRI LANKA

**பிரிவு *B* இன் நிறைவு**

## பகுதி - C

**கட்டாய வினா.**
**(மொத்தம் 20 புள்ளிகள்)**

## வினா 6ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 06 வங்கித்தொழிற்பாடும் நாணயக் கொள்கையும்**

(A) (a) **பண்புசார் கட்டுபாடுகள்**

1. தார்மீக அறிவுறுத்தல்
2. வணிக வங்கி கடனுக்கான முதிர்வு காலங்களை நிர்ணயித்தல்
3. தொகுதிப்பட்டியல் உச்சவரம்பு
4. மீள்நிதி வசதி ஏற்பாடு
5. தெரிவுசெய்யக்கூடிய வட்டிவீத நிர்ணயம்.


**(03 புள்ளிகள்)**

(b) **நிதி இடையீடு**

நிதியியல் நிறுவனங்களின் முக்கிய தொழிற்பாடானது மிகையான பணம் இருப்பவர்களிடமிருந்து வைப்புக்களை சேகரிப்பதும் அவற்றை உடனடியாகத் தேவைபடுவர்களுக்கு கடனாக நிதி வழங்கும் வங்கி முறையாகும். அதாவது மிகை அலகுகளிடமிருந்து (கடன் வழங்குபவர்களிடமிருந்து) வைப்புக்களை பற்றாக்குறை அலகுகளுக்கு கடன்பெறுபவர்களுக்கு உயர் வட்டியில் மீளகடன் வழங்குவதன் மூலம் இணைப்பை ஏற்படுத்தும் செயற்பாடு ஆகும். இதனை வணிக வங்கிகள், வர்த்தக வங்கிகள், நிதியில் நிறுவனங்கள் நிதி இடையீடு முகவர்களாக செயற்படுகின்றனர்.

வணிக வங்கிகள் வைப்புக்களை ஏற்றுக்கொண்டு அதன் மூலம் கடன்களை உருவாக்கி மற்றும் இலாபத்தினை உழைத்து வைப்பாளர்க்கு உயர் வட்டி வீதம் வழங்குவதுடன் கடன் பெறுநரிடம் அவ்வட்டியினை வசூலிக்கின்றது. இவ்பரிமாற்று நடவடிக்கையில் ஈடுபடும் நிறுவனங்களை நிதி இடையீடு நிதியில் நிறுவனங்கள் என அழைக்கப்படும்.

இவ்செயற்பாட்டினை கீழ்வருமாறு விளக்கலாம்




**(03 புள்ளிகள்)**

| அத்தியாயம் 07 பேரின பொருளாதாரமும் வணிகசூழலும். |
|---|

(B) (a) **மொத்த பெறுமதி சேர்த்தல் (GVA) அடிப்படை விலையில்**

**(06 புள்ளிகள்)**

(b) **மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP ) சந்தை விலையில்**

| | |
|---|---|
| **மொத்த பெறுமதி சேர்த்தல் (GVA) அடிப்படை விலையில்** | **94,225** |
| கூட்டுக : பொருட்கள் மீதான வரிகள் | 5,600 |
| கழிக்க : பொருட்கள் மீதான மானியங்கள் | (3,250) |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP ) சந்தை விலையில்** | **96,575** |

**(04 புள்ளிகள்)**

(c)

| அத்தியாயம் 09 பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியும் |
|---|

**பொருளாதார அபிவிருத்திக்கும் நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்கும் இடையிலான வேறுபாடு**

பொருளாதார அபிவிருத்தி என்பது ஒரு சமூக முறைமையின் மொத்த ரீதியான வளர்ச்சியுடன் பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியில் ஏற்படும் ஏற்றம். அதாவது மனித வாழ்வின் பொருளாதார நிலைமை மற்றும் தரரீதியான தன்மை உயர்வடைதலைக் குறிக்கும். பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, சூழல் பாதுகாப்பு என்பனவற்றினூடாகப் பெற்றுக்கொள்ளப்படும் முன்னேற்றமே நிலைத்து நிற்ககூடிய அபிவிருத்தி ஆகும். அதாவது எதிர்கால சந்ததினர் தமது சொந்த தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தமது திறமையை விட்டுக்கொடுக்காமல் நிகழ்காலத்திலே அவர்களுக்கு வேண்டியதை பூர்த்தி செய்யும் அபிவிருத்தியை நிலைத்து நிற்கும் அல்லது நிலைபேறான அபிவிருத்தி என கருதப்படுகின்றது.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**பிரிவு *C* இன் நிறைவு**

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".
The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2020 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*